TOTAL PAGES : 2

**18TAU02**

# PSG COLLEGE OF ARTS & SCIENCE
(AUTONOMOUS)

## BA DEGREE EXAMINATION MAY 2022
(First Semester)

Branch – **TAMIL**

## IKKAALA ILAKKIYAM-I KAVITHAI

Time : Three Hours　　　　Maximum : 50 Marks

பகுதி அ (5 மதிப்பெண்கள்)

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக　　(5 x 1 = 5)

1 பாரதியின் படைப்பினை அடையாளப்படுத்துக.

(அ) பாஞ்சாலிசபதம்　(ஆ) புரட்சிக்கவி
(இ) ஆசிய ஜோதி　(ஈ) பூங்கொடி

2 பாவேந்தர் என்று போற்றப்பெறுபவர் யார்?

(அ) பாரதியார்　(ஆ) கவிமணி
(இ) பாரதிதாசன்　(ஈ) வாணிதாசன்

3 புத்தரின் தாய் பெயரைத் தேர்க.

(அ) யசோதரை　(ஆ) மாயாதேவி
(இ) சுதமதி　(ஈ) சித்ராபதி

4 ஈரோடு தமிழன்பனின் படைப்பினைத் தேர்க.
(அ) ஆலாபனை　(ஆ) அம்பாபலி
(இ) பெய்யெனப் பெய்யும் மழை　(ஈ) வணக்கம் வள்ளுவ

5 அருகன் என்ற படைப்பினைத் தந்தவர் யார்?

(அ) வெண்ணிலா　(ஆ) தமிழச்சிதங்கபாண்டியன்
(இ) வைரமுத்து　(ஈ) அப்துல் ரகுமான்

பகுதி - ஆ (15 மதிப்பெண்கள்)

**அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக (5 x 3 = 15)**

6 அ இயற்கைப் பொருளில் எல்லாம் நான் இருக்கிறேன் என்பதனை நான் கவிதைவழிப் பட்டியலிடுக.

அல்லது

ஆ இனியொருவிதிசெய்வோம் - அதை எந்தநாளும் காப்போம் கூற்றை விளக்கி உரைக்க.

7 அ தென்றலின் சிறப்புக்களை அழகின் சிரிப்பு வழி அடையாளப்படுத்துக.

அல்லது

ஆ வானத்தின் வகைகளை அழகின் சிரிப்பு வழி எடுத்துரைக்க.

8 அ சித்தார்த்தன் மனத்தைமாற்ற அறமுதுகிழவன் கூறிய யோசனையை எழுதுக.

அல்லது

ஆ புத்தரைவீதியில் பார்த்தவர் வியந்ததன்மையை எடுத்தியம்புக.

9 அ வணக்கம் வள்ளுவ என்ற கவிதைத் தொகுப்பின் தலைப்புப் பொருத்தத்தினைப் புலப்படுத்துக.

அல்லது

ஆ சிரிப்பு கவிதை உணர்த்தும் சிரிப்பின் தத்துவங்களை விளக்கி எழுதுக.

Cont...

10 அ அடுத்த ஆண்டும் எனத் தொடங்கும் கவிதையில் பேசப்பெறும் பேசுபொருளைக் கட்டமைக்க.

அல்லது

ஆ அருகன் கவிதைத் தொகுப்பின் பெயர்க்காரணத்தை எடுத்துரைக்க.

பகுதி - இ (30 மதிப்பெண்கள்)

<u>அனைத்து வினாக்களக்களக்கும் கட்டுரை வடிவில் விடையளிக்க.</u> **(5 x 6 = 30)**

11 அ பாரதியார் வருகின்ற பாரதத்தை வாழ்த்தும் முறைமையினை விளக்குக.

அல்லது

ஆ தமிழன் சிறப்புகளாகப் பாரதியார் கூறுவனவற்றைத் தொகுத்துரைக்க.

12 அ பாரதிதாசன் அழகின் சிரிப்பில் ஆறு குறித்து கூறுவனவற்றை காட்சிப்படுத்துக.

அல்லது

ஆ தமிழன் சிறப்புகள் குறித்து பாரதிதாசன் அழகின் சிரிப்பில் கூறுவனவற்றை எடுத்தியம்புக.

13 அ சித்தார்த்தனுக்குக் காதல் பிறந்தகதையை ஆசிய ஜோதி வழி நின்று எடுத்துரைக்க.

அல்லது

ஆ புத்தர் கருணைக் கடலாகக் காட்சிதந்ததை விளக்கி உரைக்க.

14 அ வணக்கம் வள்ளுவ என்ற கவிதைத் தொகுப்பில் இடம் பெறும் எட்டாவது சீர் என்ற கவிதை உணர்த்தும் கருத்துக்களைப் புலப்படுத்துக.

அல்லது

ஆ காலந்தோறும் காதல் குறித்து வைரமுத்து பெய்யெனப் பெய்யும் மழைகவிதைத் தொகுப்பில் கூறும் கருத்துக்களை விவரிக்க.

15 அ அ. வெண்ணிலாவின் நீரில் அலையும் முகம் கவிதைத் தொகுப்பு உணர்த்தும் சமூக அவலங்களை எடுத்தியம்புக.

அல்லது

ஆ அம்பாபலி கவிதை நாடகத்தில் இடம்பெறும் கதை மாந்தர்களை அடையாளப்படுத்துக.

Z-Z-Z END